**செய்தி வெளியீடு எண் : 2342** **நாள் : 24.11.2023**

<u>செய்தி வெயியீடு</u>

## <u>1000 மாணவர் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க பட்டயப் படிப்பு விரைவில் துவங்கப்படும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் அறிவிப்பு</u>

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னை அண்ணாப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது விழாவில் புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **25** மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **30** மாணவக் குழுக்களுக்கும் என **55** புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.**32** லட்சத்து **50** ஆயிரம் நிதி உதவி மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களால் வழங்கப்பட்டது.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது "இன்று இந்த விழாவில், புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30 மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புக்களுக்குரூ. 32 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.இந்த பரிசுகளை பெறும் மாணவர்கள் இளைஞர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேக, வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் இன்றைய விஞ்ஞான உலகில் பையோ டெக்னாலேஜி. நானோ டெக்னாலேஜி, ரோபோடிக்ஸ் ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகள் உருவாகினாலும், நாம் மற்ற உலக நாடுகளுடன் போட்டி போடுவதற்கு புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் அவசியம் அத்தகைய புதிய கண்டுடிப்பிடிப்புகளை உருவாக்கிட தமிழ்நாட்டில் உள்ள புத்தாக்க சிந்தனை கொண்ட இளைஞர்களை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்திட EDII நிறுவனம் மூலம் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 26 ஆயிரத்து 410 இளைஞர்களுக்கும், ஊரக வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம், தாட்கோ, மாவட்ட தொழில் மையம் போன்ற அரசு துறைகளுடன் இணைந்து 13 ஆயிரத்து 764 இளைஞர்களுக்கும், புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 5 ஆயிரத்து 669 கல்லூரி மாணவர்களுக்கும், 97 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 74 ஆயிரத்து 969 மாணவர்களுக்கும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 78 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும் என ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி வடிவமைப்புகளுக்கும் அவற்றை தயாரித்து சந்தைப்படுத்தவும் புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 101 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் – Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 29 இன்குபேஷன் சென்ட்டர்களில் ரூ.19 கோடியே 84 லட்சம் மதிப்பீட்டில்,புதிய இயந்திரங்கள் பரிசோதனை கூடங்கள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு உள்ளன. அரசின் தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்தி 89 மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து பலன் அடைந்துள்ளனர். கல்லூரி மாணவர்கள் தங்கள் மாணவ பருவத்திலேயே புதிய தொழிலை தொடங்கும் வழி முறைகளை தெரிந்து கொள்ள, தமிழகத்தில் உள்ள 1545 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள்பயன் பெறும் வகையில் 31 இடங்களில் தொழில்முனைவோர் மையங்கள்– Hubs அமைக்கப்பட்டு தொழில் துவங்க உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து 50 மாணவர்களுக்கு ரூ.50 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனையை உருவாக்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு ரூ.1 கோடி மதிப்பில் "பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை" அறிவித்துள்ளார். இதன்படி, 4,343 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தொழில்முனைவோர்களாக மாற விழிப்புணர்வும், ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 40 மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது.கடந்த ஜீன் மாதம் நடைபெற்ற MSME தின விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் மாநில அளவில் வெற்றி பெற்ற 10 சிறந்த மாணவ குழுக்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1,000 இளைஞர்களுக்கு சுழற்சி முறையில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க பட்டய படிப்பு வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இதற்காக, 320 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கிண்டி, EDII பயிற்சி நிலையம் ரூ.4 கோடியே 41 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 260 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், EDII தலைமையிடத்தில் 10,260 சதுர அடியில் ரூ.1 கோடியே 72 லட்சம் மதிப்பில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, வகுப்புகள் தொடங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புகளை வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்த Start–Up –TN மூலம் இதுவரை SC/ST ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உட்பட 153 – ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.41 கோடியே 96 லட்சம், பங்குகளாக முதலீடாக வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கண்டுபிடிப்பாளர்களை ஸ்டார்ட் அப் நிறுவனங்களாகவும், ஸ்டார்ட் அப் நிறுவனங்களை MSME நிறுவனங்களாக வளர்த்தெடுக்க, MSME துறையில் 3 வகையான சுயதொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆட்சி பொறுப்பேற்று, இதுவரை ரூ. 892 கோடியே 94 லட்சம் மானியத்துடன் ரூ.3 ஆயிரத்து 312 கோடியே 16 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 26 ஆயிரத்து

121 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புக்களான Self chargeable வாகனங்கள் கழிவு நீர் குழாய் அடைப்புகளை நீக்கும் கருவிகள் பூக்களின் கழிவுகளிலிருந்து உரங்கள் விவசாயிகளுக்கு உதவும்சூரிய சக்தி– குளிர் பதன வாகனம் கடற்பாசியில் அழகு சாதனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்கை உறுப்புகள் என பல்வேறு கண்டுபிடிப்புகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 2G, 3G, 5G என உலகம் வேகமாக முன்னேறி கொண்டுடிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் தயாரிக்கும் வகையில் தங்களது கண்டுப்பிடிப்புகளை உருவாக்கிட வேண்டும். அதற்காக தொடர்ந்து நீங்கள் அயராமல் உழைக்க வேண்டும். அதற்கான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. ஆகவே மாணவர்கள் இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக பரிசு பெற்ற புத்தக்க கண்டுப்பிடிப்புகளின் கண்காட்சி நடை பெற்றது. கண்காட்சினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர திரு.மா. சுப்பிரமணியம் அவர்கள் துவக்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். நிகழ்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/EDII இயக்குநர் திரு.செ.உமாசங்கர், இ.ஆ,ப அவர்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.இல. நிர்மல்ராஜ், இ.ஆ.ப., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் Dr. ஆர் வேல்ராஜ் முன்னாள் EDII இயக்குநரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்ட இயக்குநர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா இ.ஆ.ப., EDII கூடுதல் இயக்குநர் முத்துராமன் மற்றும் பல்வேறு பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in